09.09.2024

MC.7/2022

PW-2, சிதம்பரம்

**எதிர் மனுதாரர் தரப்பில் கு.வி.**

நான் அருப்புக்கோட்டை பாளையம் பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் குடியிருக்கும் வீடு சொந்த வீடு என்றால் சரிதான். நான் அருப்புக்கோட்டையில் உள்ள நகைக்கடையில் வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். நான் நகைக்கடையில் சுமார் 12 வருடங்களாக வேலை பார்த்து வருகிறேன். எனக்கு மாத சம்பளம் ரூ.12000 ம் சம்பாதிக்கிறேன் என்றால் சரிதான். மனுதாரர் டிப்ளமோ முடித்துள்ளார். திருமணத்திற்கு முன்பு எல்காட் நிறுவனத்தில் தற்காலிகமாக பணிபுரிந்து வந்துள்ளார். தற்போது வீட்டுக்குடித்தனம். மனுதாரர் பெயரில் வீட்டடி மனை உள்ளது என்றால் சரிதான். மனுதாரர் எதிர்மனுதாரர் வீட்டில் உள்ள பண்ட பாத்திரங்கள் அனைத்தும் என் வீட்டிற்கு எடுத்துவந்துள்ளார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் வீட்டில் உள்ள பீரோ சாவி மனுதாரரிடம் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே என்ன பிரச்சினை என்று எனக்கு நேரடியாக தெரியாது. மனுதாரர் கூரிய பின்பு தான் தெரியும். எதிர்மனுதாரர் திருமணத்தின் போது ஜி.யோவில் வேலை பார்த்தார் என்றால் தெரியும். தற்போது ஜி.யோ கம்பெனியில் ஆட்குறைப்பு காரணமாக வேலை எதுவும் பார்க்கவில்லை என்றால் தெரியாது. தற்போது எதிர்மனுதாரர் வேலை எதுவும் பார்க்கவில்லை வேலை தேடி கொண்டு இருக்கிறார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. தற்போது மனுதாரர் தனியார் நிறுவனத்தில் வேலை பார்ப்பதாலும் அதனால் மாதம் ரூ.30,000 ம் சம்பாதிக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் மனுதாரரோடு சேர்ந்து வாழ தயாராக உள்ளார். மனுதாரர் தான் சேர்ந்து வாழாமல் நிராகரித்து வருகிறார் என்றால் சரியல்ல. மனுதாரர் தற்போது தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து கை நிறைய சம்பாதித்து வரும் நிலையில் எதிர்மனுதாரர் தற்போது வேலையில் இருந்து நிறுத்தப்பட்டு புதிதாக வேலை தேடி வருகிறார் என்றால் எனக்கு தெரியாது.